**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

**SC. 77/2022** **தேதி 09.10.2025**

**அ.சா. 2 – மணி த/பெ ராஜி**

**( எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**அ.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் நானும் கலைஞர் என்பவரும் இருந்தோம். சம்பவ இடமான அரசு மதுபானக்கடையில் சுமார் 7 ஆண்டுகளாக பணி செய்து வந்தேன். நான் நீதிமன்ற விசாரணையில் நான் பணி செய்த அரசு மதுபானக்கடை அருகே வாடகைக்கு வீடு பிடித்து குடியிருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடையின் மேற்பார்வையாளராக பணிபுரிவதால் எனக்கு கீழ் விற்பனையாளர்கள் இருவரும் அதேபோல் மதுபான பாரில் உதவியாளர் ஒருவரும் பணிபுரிவார்கள் என்றால் சரிதான். எனது பணி அன்றைய தேதியில் விற்பனை செய்யப்பட்ட தொகையை ஆவணங்களை சரிபார்த்து பெற்று கொள்ள வேண்டிய பொறுப்பு என்னுடையது என்றால் சரிதான். ஒவ்வொரு நாள் விற்பனை தொகை பற்றி மறுநாள் என்னால் சரிபார்க்கப்படும் . சம்பவத்தன்று விற்பனையாளர்கள் Shift change முறையில் ரெஸ்ட்டில் இருந்ததால் அன்றைய தினம் நான் தான் கடையை விற்பனை பணியை செய்தேன். அதனால் அன்றைய தினம் விற்பனை தொகையான ரூ. 2 லட்சத்தை நான் தான் வைத்திருந்தேன்.

2. அன்றைய தினம் நான் மாற்று ஏற்பாடு எதுவும் செய்யவில்லை. அதற்கு பதிலாக எனக்கு உதவியாக எனது உறவினர் இருவரை பணி செய்ய வைத்திருந்தேன். சம்பவதன்று விற்பனை தொகை ரூ. 2 லட்சத்திற்கு மேல் தான் இருக்கும். சம்பவ தினத்திற்கு அடுத்தவேலை நாளில் கணக்கு வழக்கை பார்வையிட்டு அதன் விவரங்களை எங்களது மேல் அதிகாரிக்கும் மற்றும் காவல் துறைக்கும் தெரிவிக்கப்பட்டது. அதை எங்கள் மாவட்ட மேலாளர் அவர்கள் ஆய்வு செய்தார். மாவட்ட மேலளாரின் ஆய்வின் போது சம்பவ தினமே விற்பனை தொகை ரூ.

2,25,000 /- என்று கண்டறிந்து எங்களுக்கு காவல் நிலையதிற்கும் தகவல் சொன்னார். போலிசார் எங்களிடமிருந்து விற்பனை சம்மந்தமான ஆவணங்களை கேட்டு பெறவில்லை என்று எதிரி தரப்பில் கேட்ட கேள்விக்கு சாட்சி விற்பனை செய்ததாக கூறப்பட்ட தொகையான ரூ. 2,25,000/- ஐ பறித்து சென்றதன் காரணமாக அந்த தொகையை எங்களை கட்ட சொல்லி 1 வார கால அவகாசம் மாவட்ட மேலளார் வாய்மொழியாக தெரிவித்திருந்தார்., அந்த தொகையை நானும் மற்ற ஊழியர்களும் 2 தவணையாக செலுத்தினோம் , தேதி ஞாபகம் இல்லை. பணத்தை திருப்பி செலுத்தியதை போலிசாரிடம் தெரிவித்துள்ளோம். சம்பவம் நடந்வுடன் ஒசூர் மாவட்ட துணை கண்காணிப்பாளருக்கு போன் மூலம் தகவல் கொடுத்தேன். தகவல் சொன்ன 15 நிமிடத்திற்குள்ளாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். பின்னர் போலிசார் என்னையும் கலைஞர் என்பவரையும் ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அன்று இரவு மட்டும் மருத்துவமனையில் நானும் கலைஞர் என்பவரும் சிகிச்சை பெற்றோம். நாங்கள் மருத்துவமனைக்கு சென்றபோது மருத்துவர்கள் எங்களை விசாரித்தார்கள் அப்போது நான் மருத்துவரிடம் 2 பேர் எங்களை தாக்கியதாக கூறினேன். 15.08.2015 அதிகாலை 3 மணியைபோல் போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள்., அதன் பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் முதல் தகவல் அறிக்கையின் நகல் எதுவும் பெறவில்லை, புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

3. பட்டியல் சாட்சிகள் 2 முதல் 12 வரையான சாட்சிகள் டாஸ்மாக் கடையில் வேலை செய்யும் நபர்கள் மற்றும் டாஸ்மார்க்குக்காக கடை வாடகை கொடுத்த உரிமையாளரும், மற்றும் எனது நண்பர்கள் என்றால் சரிதான். சம்பவ இடம் கடையை சுற்றி சுமார் 100 மீ க்கு அப்பால் கடைகள் வீடுகள் உள்ளது. சம்பவத்தின் போது எனது சத்தம் கேட்டு அருகே கூட்டுறவு வங்கியின் பாதுகாவலர் ஒருவர் மட்டும் தான் வந்தார். நான் பணம் வைத்திருந்த பை துணியால் ஆன தோள்பட்டை காக்கி நிற பை ஆகும். மறுநாள் டாஸ்மார்க் கடையில் பணம் திருடியது சம்மந்தமாக டிவியில் செய்தி வந்தது. போலிசார் எதிரிகளின் அடையாளத்தை பற்றி எங்களிடம் காண்பிக்கவில்லை. அடையாள அணிவகுப்பின் போது 3 எதிரிகளை அடையாளம் காட்டினேன். நான் அடையாள அணிவகுப்பின் போது எதிரிகளின் அடையாளம் மட்டுமே காண்பித்தேன்,

அப்போது எனக்கு அவர்களின் பெயர் தெரியாது. அதன் பின்னிட்டு எதிரிகளின் பெயர்களை தெரிந்து கொள்ளவில்லை. நான் பணி செய்த கடையில் நான் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், ஏற்கனவே நடந்த குறைபாடு மற்றும் முறைகேடை மறைப்பதற்காக , அன்றைய தினம் விற்பனையாளர்கள் இல்லை என்ற தவறான தகவலையும் நடக்காத ஒரு சம்பவத்தை நடந்நதாதக கூறி , போலிசார் அடையாளம் காட்டிய நபர்கள் மீது அடையாள அணிவகுப்பின் போது தவறான தகவலை கூறியும் , அடையாளம் காட்டியும் போலிசார் வேண்டுகோளின் படி அவர்கள் பதிவு செய்த வழக்கிற்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur